DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C. No.48/2024**
**P.W.6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அஜய் தங்கம் |
| Father's Name | : | திரு.விஜயகுமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 40 |

(Accused 1 to 3 and 5 are present. Accused 4 is absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை சரக குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2021ம் வருடம் லால்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தேன்.

கடந்த 11.04.2021ம் தேதி இலால்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.வினோத்குமார் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுகா, அன்பில் கிராம், ஜங்கமராஜபுரத்தை சேர்ந்த மணியரசன் மனைவி நாகஜோதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலையக் குற்ற எண்.266/2021, ச.பி.147, 148, 448, 323 of IPC r/w.4 of TNPHW Act and 3(1)(r), 3(1)(s) of SC/ST(POA) Act–ன் கீழ் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்துள்ளார். நாகஜோதி கொடுத்த புகார் மனு **அ.த.சா.ஆ.2** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகும். பின்பு முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வழக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் புலன்விசாரணை அதிகாரியை நியமிக்கவேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலுடன் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார்.

மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.20/SJ&HR/PROCEEDINGS/TRI/2021, நாள் 11.04.2021ன் படி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.4** ஆகும்.

மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்த வழக்கை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தினேஷ்குமார் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சம்பவ இடத்தைக் குறிக்கக்கூடிய பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6** ஆகும்.

பின்பு நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதி மற்றும் சாட்சிகள் மணியரசன், ருக்மணி, கௌசல்யா, நதியா மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள்

கார்த்திகேயன் மற்றும் ஜெயவேல் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்பு இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச் சான்று மெய்தன்மைச் சான்று கேட்டு இலால்குடி வட்டாட்சியர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார்.

பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதிக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சைக்கு அனுமதித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கிய இலால்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.7** ஆகும்.

பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.வினோத்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி மேற்படி வழக்கை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சீதாராமன் அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார்.

மேற்படி வழக்கை திரு.சீதாராமன் அவர்கள் தனது தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச் சான்று மெய்தன்மைச் சான்று கேட்டு இலால்குடி

வட்டாட்சியரிடம் கேட்டபோது இலால்குடி வட்டாட்சியர் திருமதி.சித்ரா அவர்கள் வருவாய் ஆய்வாளரின் விசாரணை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதி இந்து பள்ளன் எனப்படும் பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், எதிரிகள் வீரமணி, அண்ணாதுரை, வினித்குமார், ஜெயகுமார், நிதிஷ்குமார் ஆகியோர்கள் இந்து கள்ளன் எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் சாதி சான்று மெய்தன்மை சான்று வழங்கினார். அந்த சாதி சான்று மெய்த் தன்மை சான்று **அ.த.சா.ஆ.8** ஆகும். பின்பு சாதிச் சான்று மெய்தன்மை சான்று வழங்கிய வட்டாட்சியர் திருமதி.சித்ரா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சீதாராமன் அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.39/FUR.PROCEEDINGS/SJ&HR/TRI/2022, நாள் 09.11.2022ன் படி மேற்படி வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.9** ஆகும்.

மேற்படி வழக்கை எனது தொடர்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்ட போது ஏற்கனவே புலன்விசாரணை செய்த அதிகாரி தயார் செய்து வைத்திருந்த மாதிரி வரைபடம், பார்வை மகஜரை ஒத்து இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. வழக்கின் மற்ற சாட்சிகளை விசாரணை செய்தபோது இவ்வழக்கின் முந்தைய புலன்விசாரணை அதிகாரியிடம் கூறிய விவரங்களையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

VERDICTUM.IN

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதியை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

நான் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.10/FUR.PROCEEDINGS/SJ&HR/TRI/2024, நாள் 28.03.2024ன் படி மேற்படி வழக்கை திரு.ரகுபதிராஜா தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.10** ஆகும்.

மேற்படி வழக்கை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ரகுபதிராஜா அவர்கள் தொடர்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதியை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

அவரது விசாரணையில் புகார்தாரர் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என தெரிந்தும் அவர் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சாதி பெயரை சொல்லி அசிங்கமாக திட்டி அடித்து கொலை மிரட்டல் செய்துள்ளது தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 147, 148, 448, 323 of IPC r/w.4 of TNPHW Act and 3(1)(r), 3(1)(s) of SC/ST(POA) Act–லிருந்து 147, 148, 294(b), 323, 448, 506(ii) of IPC and 3(1)(r), 3(1)(s),3(2)(va) of SC/ST(POA) Act r/w.4 of TNPHW Act –ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும்.

பின்பு வழக்கின் புலன்விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். என்னுடைய புலன் விசாரணையின் போதும், மற்ற புலன்விசாரணை

அதிகாரிகளின் விசாரணையின்போதும் சாட்சிகள் நாகஜோதி, மணியரசன், ருக்மணி, கௌசல்யா, நதியா ஆகியோர் சம்பவம் குறித்து சொன்னார்கள்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**

அ.சா.1 நாகஜோதியிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு விட்டு இந்த வழக்கிற்கு ஏற்றவாறு புகார் மனு தயாரித்தோம் என்றும், அதனை அடிப்படையாகக் கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்றவாறு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நானும் இந்த வழக்கை புலன் விசாரணை செய்த மற்ற புலன் விசாரணை அதிகாரிகளும் வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.